IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS
SC.NO.105/2021

Deposition of Witness for P.W.15

| | | |
|---|---|---|
| NAME | - | Tr..Rajesekar |
| FATHER NAME | - | V. RAVIKUMAR |
| VILLAGE | - | KATPADI |
| TALUK | - | VELLORE |
| OCCUPATION | - | Sub Inspector of police,Vellore North Police Station |
| AGE | - | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 07.08.2025.

எதிரிகள் ஆஜர்.

<u>முதல் விசாரணை –</u>

நான் வேலூர் வடக்கு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 11.01.2021 அன்று காலை 9 மணிக்கு நிலைய அலுவலில் இருந்த போது வட வேலூர் கிராம நிர்வாக அலுவலர் திரு.ரஞ்சித் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று வேலூர் வடக்கு காவல் நிலைய குற்ற எண்.26/2021 கு.வி.மு.ச பிரிவு 174 வழக்கு பதிவு செய்து நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைத்தேன். அச்சுப் படிவ முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.15. ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>குறுக்கு விசாரணை– எதிரிகள் தரப்பு</u>

10.01.2021 அன்று இரவு 7 மணிக்கு இறந்து போன வேலுவின் மனைவி ஈஸ்வரி தனது கணவரை 04.01.2021 அன்றிலிருந்து காணவில்லை என்று புகார் கொடுத்ததின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை குற்ற எண்.23/2021 பதிவு செய்தேன். ஈஸ்வரி

07/08/2025

கொடுத்த புகார் எ.த.சா.ஆ.1. அதன் பேரில் நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை எ.த.சா.ஆ.2. 04.01.2021 அன்று இரவு 9 மணிக்கு எனது கணவர் வீட்டிலிருந்து இருசக்கர வாகனத்தில் சென்றார் என்று புகாரில் சொன்னார் என்று சொன்னால் சரிதான். ஈஸ்வரி தோட்டப்பாளையத்தில் இருந்து காவல் நிலையம் வர 1/2 மணி நேரம் ஆகும். காவல் நிலையத்தில் இருந்து நீதிமன்றம் வர 1/2 மணி நேரம் ஆகும்.

07/08/2025

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 07.08.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

7.8.25

**Additional District Judge(FTC)**
**Vellore.**